*8*

# ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. 1095–975

***சவுல் அபிஷேகம் செய்யப்பட்டதிலிருந்து ரெகொபெயாம் அரியணை ஏறியது வரை***

*1 சாமு. 11-31; 2 சாமு.; 1 இராஜா. 1-11*

## I. அறிமுகம் -தேவனுடைய **ஆளுகை.**

***1. தொடக்க வடிவமைப்பு.****—சீனாய் மலை அடிவாரத்தில் நிறுவனமாக்கப்பட்ட பொழுதில் இருந்தே இஸ்ரவேல் மக்கள் உண்மையில் ஒரு இராஜ்யமாய் இருந்தார்கள். அவர்கள் தேவ ஆளுகைக்குட்பட்டவர்களாக, தேவனுடைய ஒரு இராஜ்யமாக இருந்தார்கள். உண்மையில் தேவனே அவர்களின் இராஜாவாய் இருக்க வேண்டியிருந்தது என்றாலும், முதலாவது மோசே (அரசராக) இருந்தார், மற்றும் சில கருத்துக்களில் பிரதான ஆசாரியர்கள் (இஸ்ரவேல்) இனத்திற்காக/நாட்டிற்காக தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார்கள். இருப்பினும் கூட முதலில் இருந்தே பூமிக்குரிய ஒரு இராஜா ஆழ்ந்து சிந்திக்கப்பட்டு வந்ததாகக் காணப்படுகின்றது. ஆபிரகாமின் சந்ததியில் அவர்கள் (எழும்பி) இருக்க வேண்டியதாயிருந்தது (ஆதி. 17:16). அரசருக்கான பிரமாணத்தை மோசே வகுத்துக் கொடுத்தார் (உபா. 17:14-20).*

*மேலும், பூமிக்குரிய இராஜா இனங்கள் எல்லாவற்றையும் ஆசீர்வதிக்க இருந்த ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "சந்ததி"யின் மிகச் சிறந்த மாதிரியைக் கொடுத்தது; ஆகவே, பிற்காலத் தீர்க்கதரிசனத்தில், மேசியா தாவீதின் சந்ததியில் வரவேண்டியவராகவும், தாவீதின் அரியணையில் அமர வேண்டியவராகவும் இருக்கிறார்.*

***2. முடியாட்சிக்கு மாற்றம் அடைதல்.****—பிற்காலத்தில் சாமுவேலின் வாழ்நாட்களின் போது மக்கள் (தங்களை ஆள) அரசர் ஒருவர் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். (1 சாமு. 8ஐக் காணவும்.) அவர்கள் இரண்டு காரணங்களை வற்புறுத்தினார்கள்: சாமுவேலின் மகன்கள் நியாயாதிபதிகளாய்த் தொடரத் தகுதியற்றுப் போன நிலை, மற்றும் தங்களைச் சுற்றிலும் உள்ள நாட்டவர்கள் போல் தங்களை(யும்) யுத்தத்தில் வழிநடத்திச் செல்வதற்கு ஒரு அரசர் வேண்டும் என்ற தங்களின் விருப்பம். நியாயாதிபதிகளின் கீழ் வளர்ந்து கொண்டிருந்த ஒழுங்கற்ற நிலை மற்றும் அவர்களை(இஸ்ரவேல் நாட்டவரை)ச் சுற்றிலும் இருந்த பிற நாட்டவரின்*

*வலுச் சண்டை செய்யும் தன்மை போன்ற பிற காரணங்களும் இருந்தன என்பதில் ஐயமில்லை. (அவர்களின்) அவ்வேண்டுகோளானது சாமுவேலின் இருதயத்தைப் பிளந்தது; அது ஒரு பகுதி தமக்கு அவர்கள் நன்றியற்றுப் போன காரணத்தால் என்பது உறுதியானதே, ஆனாலும் அது அவர்கள் தங்களின் உண்மையான அரசத்துவ அதிகாரம் கொண்டவர் யெகோவா என்ற வகையில் அவருக்குப் பற்றுறுதியின்மையை வெளிப்படுத்தியதே பிரதான காரணமாயிருந்தது. இருப்பினும் அவர்களின் செயலில் என்பதற்கு மாறாக அவர்களின் எண்ணப்போக்கிலேயே பாவம் இழைந்து கிடந்தது; மற்றும் (அவ்வேண்டுகோளுக்கு) இணங்கிச் செல்லும்படி தேவனால் அவர் அறிவுறுத்தப்பட்டார், மற்றும் யெகோவாவின் மீது (தாம்) கொண்டிருந்த மிக மேன்மையான மெய்ப்பற்றுடன் அவர் தம்மை ஒதுக்கி வைத்து முடியாட்சியைத் தொடங்கி வைக்கும் அடிவைப்பை மேற்கொள்ளுகின்றார்.*

## II. *சவுலின் ஆளுகை.*
## *(கி.மு. 1095-1055. 1 சாமு. 11-31.)*

***1. சவுல் தேர்ந்தெடுக்கப்படுதல்.***—*அ. அவர் தனிப்பட்ட வகையில் அபிஷேகம் பெறுதல்.—சவுல், பென்யமீன் என்ற சிறிய கோத்திரத்தில் கீஸ் என்பவரின் மகனாய் இருந்தார். ஒரு நாள் அவர் தம் தந்தையின் கழுதைகளைத் தேடிச் சென்ற பொழுது, தீர்க்கதரிசியான சாமுவேலைச் சந்திக்கச் சென்றார். அந்தச் சந்திப்பின் விளைவாக, சாமுவேல், தெய்வீக அறிவுறுத்துதலினால் சவுலை அரசராய் இருக்கும்படி அபிஷேகம் செய்கிறார்.*

*ஆ. அவர் வெளிப்படையாகத் தேர்ந்து கொள்ளப்படுதல்.—அதன் பின், விரைவிலேயே சாமுவேல், மிஸ்பா என்ற இடத்தில் (இஸ்ரவேல்) இனத்தவரின் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கின்றார். அவர்கள் திருவுளச் சீட்டு மூலம் (அரசரை) தேர்வு செய்யும் நிகழ்ச்சியைச் செயல்படுத்துகின்றனர். சீட்டு சவுலின் பெயரில் விழுகின்றது, அவரோ தளவாடங்கள் இருக்கிற இடத்திலே தன்னடக்கத்துடன் ஒளிந்து கொண்டிருக்கின்றார். அங்கிருந்து அவர் அழைத்துக் கொண்டு வரப்பட்ட பொழுது, அவரது உயர்ந்த உருவ அமைப்பானது மாபெரும் உற்சாகத்தை எழுப்புகின்றது. இருப்பினும் சிலர், அவரை (சவுலை) "அற்பமானவர்" என்று கூறி இகழ்கின்றார்கள். சவுல் அந்த மரியாதைக் குறைவான நடக்கையை அமைதியாய்க் கடக்கின்றார், மற்றும் அரசருக்குரிய செய்கைகளினால் அங்கீகாரத்தை வெற்றி பெற வாய்ப்பு ஒன்றிற்காக ஞானத்துடன் காத்திருக்கின்றார்.*

*இ. அம்மோனியர்களைத் தோல்வியுறச் செய்தல்.—அவரது வாய்ப்பு விரைவிலேயே வந்தது. அம்மோனியர்கள் வந்து கீலேயாத்தின் யாபேலைப் பிடித்துக் கொண்டார்கள். அதன் குடிமக்கள் சவுலிடம் வந்து அச்சம் கலந்த துன்பத்துடன் முறையிட்டார்கள். அப்பொழுது சவுல், ஒரு ஜோடி ஏர்மாடுகளைப் பன்னிரண்டு துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு கோத்திரத்திற்கு அனுப்பி வைத்து, அவர்கள் (அம்மோனியரை எதிர்த்து) யுத்தம் செய்ய வரவில்லையென்றால்*

*அவர்களின் மாடுகளுக்கும் அப்படியே செய்யப்படும் என்று எச்சரித்து, யுத்தத்திற்கு எல்லாரும் அவசியம் வர வேண்டும் என்று கட்டளையிட்டார். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் இஸ்ரவேலில் முந்நூறு ஆயிரம் ஆண்கள் திரண்டனர், சவுல் விரோதியின் மீது திடீரென்று விழுந்து, அவர்களை பதரைப் போல் சிதறடித்தார்.*

*ஈ. கில்காலில் முடி சூட்டப்படுதல்.—சவுலின் வெற்றியானது (அவருக்கிருந்த) எதிர்ப்பை அமைதிப்படுத்திற்று, மற்றும் கில்காலில் நடத்தப்பட்ட கோத்திரங்களின் இன்னொரு கூட்டத்தில் அவர், இஸ்ரவேலின் அரசராக வெற்றிகரமாய் முடி சூட்டப்பட்டார்.*

***2. சவுல் புறக்கணிக்கப்படும் வரை அவரது ஆளுகை.****—அ. சுதந்திரப் போர்.—சாமுவேலின் கீழ் இஸ்ரவேலர்கள் எபெநேசர் என்ற இடத்தில் பெலிஸ்தரின் மீது தொடுத்த யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்தார்கள், ஆனால் அவர்களின் சார்புத் தன்மையை ஒருக்காலும் முற்றிலுமாகக் களைந்து போட்டிருந்ததில்லை; மற்றும் சமீபத்தில் தான் இஸ்ரவேலர்களின் ஆயுதங் களைக் களையச் செய்ததின் மூலம் பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்கள்மீது விலங்குகளை இன்னும் அதிகமாய் இறுக்கியிருந்தார்கள். சவுல் தம் அரியணையில் தாம் பாதுகாப்புடன் இருப்பதை உணர்ந்த உடனேயே இந்தத் தாழ்மையான சார்புத் தன்மைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று தீர்மானித்தார். மிக்மாஸில் கிடைத்த வெற்றிதான் இந்தப் போரில் மிகவும் நினைவுகூரத் தக்க நிகழ்ச்சியாய் இருந்தது. சவுலின் மகன் யோனத்தான் தனது ஆயுதங்களைச் சுமக்கும் பணியாளுடன் குன்றுகளின் மீதேறி பெலிஸ்தரின்மீது திடீர்த் தாக்குதல் நடத்தி, அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தினார். சவுல் அந்த அனுகூலத்தைப் பின்பற்றி அவர்களை பெத்தாவேன் (maritime plain) (1 சாமு. 14:23) மட்டும் துரத்தியடித்தார்.*

*ஆ. சவுலின் மற்ற யுத்தங்கள்.—இஸ்ரவேலின் ஒவ்வொரு பக்கத்தி லிருந்தும் எண்ணற்ற நாடுகள் அதை (இஸ்ரவேலை) அழுத்திக் கொண்டிருந் தன, மற்றும் சவுல், மோவாப், அம்மோன், ஏதோம் மற்றும் வடகிழக்கில் இருந்த சீரியாவின் ஒரு அரசான சேபா ஆகியவற்றுடன் யுத்தம் நடத்தினார்.*

*இ. சவுல் புறக்கணிக்கப்படுதல்.—இதுவரை உள்ள மனிதர்களில் பலரைப் போன்றே சவுலும் தம் பணிப் பொறுப்பில் சீர் குலைந்தவரா கின்றார். அவர் தாம் ஒருவரே இஸ்ரவேலின் உண்மையான அரசரின் பூமிக்குரிய பிரதிநிதியாய் இருப்பதை மறந்து போகின்றார். அவர் யெகோவாவிடம் பற்றுறுதியற்றவராக, சுய சித்தம் கொண்டவராக, கீழ்ப்படியாதவராக ஆனார். அமலேக்கியரை அழிப்பதற்கு அனுப்பப்பட்ட அவர் (சவுல்) வெற்றிச் சின்னம் என்ற வகையில் ஆகாகு அரசரையும் மற்றும் யெகோவாவுக்கு மிக மேன்மையான பலியாக ஆடுகளையும் மாடுகளையும் கொல்லாமல் விட்டு வைத்து ஒதுக்கிக் கொண்டிருந்தார். கீழ்ப்படியாமை யின் அந்த நாளில் இருந்து அவர் தேவனால் உரிமை கொள்ளப்படாமலும், சாமுவேலினால் கை விடப்பட்டும் இருந்தார்.*

***3. சவுலின் வீழ்ச்சியும் தாவீதின் எழுச்சியும்.****—சவுலின் ஆட்சிக் காலத்தின் எஞ்சிய பகுதியானது தாவீதின் வரலாற்றில் தக்க வகையில் அடங்குகின்றது. தாவீது அரசராய் இருக்கும்படி சாமுவேலினால் தனிப்*

பட்ட முறையில் அபிஷேகம் பண்ணப்படுகின்றார்; (சவுல்) அரசரின் பித்த நிலையைச் சரிப்படுத்துவதற்காக அவரது அரண்மனையில் பணிபுரிய அழைப்பாணை விடுக்கப்பட்டது; பிற்பாடு பெலிஸ்தருடன் நடந்த யுத்தம் ஒன்றில் அவர் (தாவீது), இராட்சதனாயிருந்த கோலியாத்தைக் கொலை செய்தார்; மக்களின் புகழ்ச்சியினால் சவுலின் பித்தம் கொண்ட பொறாமை விழித்தெழுகின்றது. சவுல் தம் சொந்தக் கைகளினாலேயே தாவீதைக் கொல்லுவதற்கு இருமுறை முயற்சி செய்கின்றார்; தமது மகளைத் தாவீதுக்குத் திருமணம் செய்து கொடுத்து அதன் மூலம் அவரை அகப்படுத்தப் பார்க்கின்றார், மற்றும் கடைசியாக, அவரைச் சட்ட விரோதமான வாழ்வுக்குத் துரத்தி பல ஆண்டுகளாக ஒளிந்து கொண்டிருந்த இடங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றிற்குத் துரத்தி வேட்டையாடு கின்றார். பெலிஸ்தருடனான புதிய யுத்தம் ஒன்றில் சவுல் தேவனால் கை விடப்பட்ட நிலையில், வரவிருந்த யுத்தத்தில் தனது நல்வாய்ப்புக்களை அறிவதற்காக எந்தோர் என்ற இடத்தில் இருந்த ஒரு சூனியக்காரியிடம் போக்கிடமாய்ச் செல்கின்றார். அடுத்த நாளில் கில்போவா என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தோற்கடிக்கப்படுகின்றது, சவுலின் மகன்கள் கொல்லப்படுகின்றனர், பிலிப்பியின் புரூட்டஸ் மற்றும் காஸியஸ் போல சவுல் தமது சொந்த வாளினாலேயே மரணம் அடைகின்றார். கீலேயாத்தின் யாபேசில் மிக மேன்மையாய் உதிக்கும் வகையில் தோன்றிய சூரியன் கில்போவாவில் மிகவும் இருண்ட நிலையில் மறைந்தான்.

***4. சவுலின் ஆட்சியின் தன்மைகள்.*** சவுல், நகரங்களை கட்டி யெழுப்பியவராகவோ, அரசியல் நிறுவனராகவோ/ஒருங்கமைப்பாள ராகவோ, இலக்கியத்தின் பாதுகாவலராகவோ, அல்லது உண்மையான பக்தியை/மதத்தை மேம்படுத்துபவராகவோ இருந்ததில்லை. அவர் இராணுவ நிபுணராயிருந்தார், நாடானது அபாயத்தில் அழிந்து கொண்டிருந்த வேளையில் அதன் அண்டை நாடுகளின் மத்தியில் தனது படை பலத்தை நிலைநிறுத்தும்படி அதற்கு ஒரு இராணுவ நிலைப் பாட்டைத் தர அவர் அதிகமாய்ப் பணியாற்றினார். அது போலவே, அவர் மக்களின் இருதயத்திற்குப் பின் சென்ற மனிதராயிருந்தார். ஆனால் தேவனு டைய ஆளுகையில், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் காரியத்தில் அவர் யெகோவாவிற்குப் பற்றுறுதியற்றவராகி, மிகவும் சுய சித்தம் கொண்டவரானார், மற்றும் நாட்டின் மிகச் சிறப்பான நிலைக்கு தேவனு டைய இருதயத்தின்படியாக வழிவகுக்கக் கூடியவர் என்ற நிலையில் அவர் இல்லாததால் அதைச் செய்யாதபடி (அரச பதவியிலிருந்து) நீக்கப்பட்டார்.

## III. தாவீதின் வாழ்வும் ஆளுகையும்.
## *(கி.மு. 1055-1015. 1 சாமு. 16-31; 2 சாமு.; 1 இரா. 1-11:11; 1 நாளா. 11-29).*

**வரலாற்றில் தாவீதிற்கான இடம்.**—ஆபிரகாம், மோசே, தாவீது— இவைகள் பழைய ஏற்பாட்டு வரலாற்றில் மாபெரும் மூன்று பெயர்களாக உள்ளன. ஆபிரகாம் (யூத இனத்தின்) தோற்றுவிப்பாளராக இருந்தார்,

மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பவராயிருந்தார்; தாவீது ஒப்புயர்வற்ற அரசராயிருந்தார். அவரது ஆட்சியானது நாட்டளவிலான வல்லமை மற்றும் வளமையின் உச்சகட்டத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. ஆனால் தாவீது அரசர் என்பதற்கும் மேலானவராயிருந்தார்; அவர் தம் மக்களின் பாடகராயிருந்தார். மோசேக்கு அடுத்தப்படியாக எபிரெய இலக்கியத்தில் தாவீதின் வாழ்வும் எழுத்துக்களும் பெருமளவு இடத்தைப் பிடிக்கின்றன. சொல்லப் போனால், பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் பாத்திரத்தைக் காட்டிலும் இவரைப் பற்றி நாம் மிக அதிகமாய் தனிப்பட்ட வரலாற்றை அறிகின்றோம். அவரது வாழ்வு மற்றும் ஆளுகையின் நிகழ்ச்சிகள் பின்வருமாறு ஐந்து சகாப்தங்களின் கீழ் வகைப்படுத்தப்படலாம்.

***1. சகாப்தம் I.—பெத்லகேமில் ஆடு மேய்க்கும் வாழ்வு.****—அ. பிறந்த இடமும் குடும்பமும்.*—தாவீது, ஈசாயின் மகனாகவும், போவாஸ் மற்றும் ரூத் ஆகியோரின் கொள்ளுப் பேரனாகவும் இருந்தார். அவர் சார்ந்திருந்த யூதா கோத்திரம் யாக்கோபின் முற்பிதாவுக்குரிய ஆசீர்வாதத்தில் இராஜரீகக் கோத்திரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (ஆதி. 49:8-12), அது தன்னை அவ்விதமாய் குறிப்பிட்டுக்காட்டுவதற்கு இன்னமும் சிறிதளவே (பணி) செய்திருந்தது. தன்னிலே தனிச் சிறப்பெதுவுமற்றதா யிருந்தாலும் எப்பொழுதும் பரிசுத்தமான பெத்லகேம் என்ற ஊரில் தாவீது பிறந்தார், அது அவரது தொடக்க காலத்தின் சொந்த இடமாக இருந்தது மட்டுமின்றி, அவரது மாபெரும் மகன் பிறந்த இடமாகவும் ஆயிற்று.

*ஆ. அவரது தொழில்.*—தாவீது ஒரு ஆடு மேய்ப்பராய் இருந்தார், இது ஒரு தாழ்மையானதாயினும் மதிப்புக்குரிய அழைப்பாக இருந்தது, மற்றும் இது ஒருவரிடத்தில் தைரியத்தையும் கவன உணர்வையும் வேண்டுகின்ற தாயிருந்தது. அவரது இளம் வயதின் சாகசங்களாக பதிவு செய்யப்பட்ட விவரங்களில் அவர் தமது மந்தையைக் காப்பதற்காக ஒரு சிங்கத்தையும் கரடியையும் கொன்ற நிகழ்ச்சிகள் உள்ளன. அவரது சங்கீதங்கள் பலவற்றில் அவரது வெளிப்புறமான மேய்ப்பு வாழ்க்கையின் சுவடுகள் உள்ளன.

*இ. அவரது தனிப்பட்ட அபிஷேகம்.*—சவுல் புறக்கணிக்கப்பட்ட பின்பு, ஈசாயின் மகனை அபிஷேகம் செய்விப்பதற்காக சாமுவேல் அனுப்பப்பட்டார். அம்மகன்களில் மூத்தவரான எலியாபின் தோற்றம் கண்டு அவர் (சாமுவேல்) ஈர்க்கப்பட்டார். தோற்றத்தின் கம்பீரம் அல்ல ஆனால் இருதயத்தின் நேர்மையே உயர்வான நம்பிக்கை/ஒப்புவித்தல் களுக்கு மனிதர்களைத் தகுதிப்படுத்துகின்றது என்பதை சாமுவேல் கூட ஒரு கணம் மறந்து விட்டார் என்றே காணப்படுகின்றது. சவுல், மக்களின் இருதயத்திற்கேற்ற ஒரு மனிதனாக, தோற்றத்தில் வசிகரம் மிக்க, ஒரு இராணுவ வீரராக, இன்னும் சற்று மிகைப்பட்டவராக இருந்தார். ஈசாயின் மகன்கள் ஒவ்வொருவராய்க் கடந்து வந்து (சாமுவேலினால்) கண்ணோக் கப்பட்டு, தாவீதின் முறை வரும்வரை (மற்ற) யாவரும் புறக்கணிக்கப் பட்டார்கள். அவர் (தாவீது) "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதரா யிருந்து," இஸ்ரவேலின் உண்மை அரசரான யெகோவாவிடம் பற்றுறுதி

கொண்டவராயிருப்பார். (அவரை) அபிஷேகம் செய்வித்தது தனிப்பட்ட தாக இருந்தது, அநேகமாக அது அவரது (தகப்பன்) வீட்டாரால் கூட முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாமல் இருந்திருக்கலாம்.

*ஈ. சவுலுக்கு ஊழியம் செய்தல்.*—"அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்."[1] "கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தது" (1 சாமு. 16:13, 14). தாவீது அபிஷேகம் செய்விக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த விவரங்களை விளக்கும் பதிவேடு இவ்விதமாக உள்ளது. பழங் காலத்தில் சாதாரணமாய்க் காணப்பட்ட ஒரு வழக்கத்தின்படி சவுலின் அரண்மனையாட்கள், அவருடைய (சவுலுடைய) கலக்கம் கொண்ட, இருளாக்கப்பட்ட ஆவியை இசையினால் அமைதிப்படுத்தும்படி நாடினார்கள். ஏற்கனவே புகழ்மிக்க இசைக் கலைஞராயிருந்த இளைஞர் தாவீது, அரசரின் அரண்மனையில் வந்து பணிபுரியும்படி அழைப்பிக்கப் பட்டார். இருப்பினும், அவர் அரண்மனையில் இருந்ததென்பது தற்காலிக மானதாயிருந்ததாக அல்லது ஒருவேளை, எப்போதாவது நடைபெற்ற தாகவே இருந்ததாகக் காணப்படுகின்றது, ஏனெனில் அவரை (தாவீதை) நாம் விரைவிலேயே அவரது தந்தையின் மந்தைகளுடன் காணப் போகின்றோம்.

*உ. கோலியாத்துடன் தாவீதின் போர்.*—சவுல் விரைவிலேயே பெலிஸ்தருடன் இன்னொரு யுத்தத்தில் ஈடுபட்டார். கோலியாத் என்னும் பெயர் கொண்ட மாபெரும் இராட்சதன் ஒருவன் தனிநபர் யுத்தத்திற்கு யாரேனும் வரும்படி நாற்பது நாட்களாகச் சவால் விட்டு அழைத்துக் கொண்டிருந்தான், ஆனால் அந்த யுத்தத்தைச் செய்யத் துணிந்த தைரியசாலி எவரும் இஸ்ரவேலில் இருக்கவில்லை. இளமை நிறைந்த தாவீது, படையிலிருந்த தம் சகோதரர்களுக்குச் செய்தி கொண்டு போகும்படி அனுப்பப்பட்டிருந்தார், அவர் (கோலியாத்தின்) சவாலை ஏற்றுக்கொண்டு, கவண் தவிர வேறெந்த ஆயுதமும் இல்லாமல், யெகோவாவின்மீது விசுவாசம் தவிர வேறெந்தக் கவசமும் இல்லாமல், தற்பெருமை பேசிய அந்தப் பெலிஸ்தனை வெற்றி கொண்டார். அதைத் தொடர்ந்து இஸ்ரவேலுக்கு வெற்றியளித்த பொதுவான யுத்தமொன்று நடந்தது. தாவீதின் துணிவான செயலினால் இரு விளைவுகள் ஏற்பட்டன. இது சவுலின் மகன் யோனாத்தானுடைய ஆத்துமாவை தாவீதுடன் ஒரு மென்மையான, நீடித்த நட்புறவில் பின்னிப் பிணைத்தது, மற்றும் இது தாவீது சவுலின் படை வீட்டில் உறுப்பினராகும்படி வழிநடத்தியது.

***2. சகாப்தம் II.—சவுலின் அரண்மனையில் தாவீதின் வாழ்வு.***—*அ. சவுலின் பொறாமை.*—யுத்தத்திலிருந்து (அவர்கள்) திரும்பிய வேளையில், வெற்றி ஊர்வலம் சென்ற பெண்கள், "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என்று பாடினார்கள்.[2] சவுல், ஒரு புறக்கணிக்கப்பட்ட அரசராகத் தாம் இருந்ததை அறிந்தார், மற்றும் (அரசராய்) வரப் போகிற மனிதர் தாவீதுதான் என்று அவர் சந்தேகப்படத் தொடங்கினார் என்பதில் ஐயம் இல்லை. "அந்நாள் முதற்கொண்டு சவுல்

*தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்."*[3]

*தாவீது தன்னடக்கத்துடனேயே நடந்து கொண்டார், ஆனால் அவருக்கு வளர்ந்து கொண்டிருந்த புகழானது சவுலின் பொறாமைக் கனலை விசிறி விட்டது. சவுல் தாவீதைக் கொல்லுவதற்கு மீண்டும் மீண்டும் முயற்சி செய்தார்; இருமுறை அவர் தம் சொந்தக் கைகளாலேயே கொல்ல முயற்சி செய்தார், ஒருமுறை தமது அரண்மனையாட்கள் அவரைக் கொல்லும்படி வற்புறுத்தினார்; நூறு பெலிஸ்தர்களைக் கொன்று வந்தால், தம் மகள் மீகாளை அவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகக் கூறி அவரை (தாவீதை) அகப்படுத்த நாடினார். இந்த சோதனை காலம் முழுவதிலும் யோனத்தான் தாவீதுக்கு நண்பராகவே நிலைத்து நின்றார், ஆனால் தனது தந்தை தாவீதைக் கொலை செய்ய நிலைத்த நோக்கம் கொண்டிருப்பதைக் கடைசியில் உறுதியாய் நம்பிய அவர் தாவீது தப்பிச் செல்வதற்குப் பெருந்தன்மையுடன் உதவினார்.*

***3. சகாப்தம் III.—சட்டத்திற்குப் புறம்பான தாவீதின் வாழ்வு.****—பல ஆண்டுகளாகத் தாவீது, சவுலினால் வேட்டையாடப்பட்டு சட்டத்திற்குப் புறம்பானவராகவும், தமது நண்பர்களாயிருந்த மக்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டவராகவும் எங்குமே பாதுகாப்பில்லாதவருமாகவே இருந்தார். யோசேப்பைப் போல, மகா ஆல்ஃபிரடைப் போல, இராபர்ட் புரூஸைப் போல இவர் எதிர்ப்பின் பள்ளியிலேயே அரியணைக்குத் தயார் செய்யப்பட்டார். சவுலின் அரண்மனையிலிருந்து தப்பியோடிய பின்பு அவர் (ஆசரிப்புக்) கூடாரம் இருந்த நோப் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு அவர் தேவ சமூகத்தப்பங்களை ஆசாரியரிடமிருந்து உணவாகப் பெற்றுக் கொண்டு, கோலியாத்தின் பட்டயத்தையும் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார். அவர் காத் என்ற பெலிஸ்தரின் நகருக்குத் தனது ஓட்டத்தைத் தொடர்ந்தார், இது அவரது பழைய எதிரியான தேவ நம்பிக்கையற்ற கோலியாத்தின் சொந்த ஊராய் இருந்தது. அங்கும் கூட அவருக்குப் பாதுகாப்பில்லை, ஏனெனில் அவரைப் பெலிஸ்தர்கள் விரைவிலேயே அடையாளம் கண்டு கொண்டார்கள், மற்றும் அவர் மேற்கு யூதாவில் இருந்த அதுல்லாம் என்ற மலைக்குகையில் ஒளிந்து கொண்டார். விரைவிலேயே அவரைச் சுற்றிலும் தைரியம்மிக்க ஆவிகளைக் கொண்ட மனிதர்கள் ஒன்று கூடினார்கள், அவர் விரைவிலேயே சட்டத்திற்குப் புறம்பான கூட்டமொன்றின் தலைவரானார். தமது வயதான பெற்றோர் களின் பாதுகாப்பைக்கருதி யோர்தானைக் கடக்கச் செய்து அவர்களை மோவாப் நாட்டிற்கு அழைத்து வந்தார், பின்பு அவர் சவக்கடலில் மேற்கு முனையைச் சுற்றிலும் இருந்த வனாந்தர மலை நாட்டிற்குத் திரும்புகின்றார். அவரைச் சவுல் பலத்த பாதுகாப்பிடங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு வேட்டையாடித் துரத்துகின்றார். இருமுறை சவுல் தாவீதின் ஆதிக்கத்தில் இருக்கின்றார், ஆனால் தாவீது பெருந்தன்மையாக அவரை (சவுலை) உயிர் தப்பிக்கச் செய்கின்றார். அவர் (தாவீது), கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்டவருக்கு விரோதமாகத் தமது கையை உயர்த்த மாட்டார். தெய்வீகத் தேர்ந்தெடுப்பின் உரிமை மற்றும் அபிஷேகம் ஆகியவற்றினால் அவரே (தாவீதே) அரசாயிருந்தாலும் தேவனுடைய*

நேரத்திற்காக அவர் காத்திருப்பார். இந்தக் காலகட்டத்தின் ஏதோ ஒரு வேளையில் தாவீதுக்கும் யோனாத்தானுக்கும் இடையில் (இருதயத்தைத்) தொடுகின்ற கடைசி சந்திப்பு நடைபெற்றது. சூழ்நிலைகள் அவர்களை இயல்பான எதிரிகளாக்கின, ஆனால் இவ்வளவு வீரத்துவம் நிறைந்த இரு ஆத்துமாக்களின் நட்புறவை எந்த ஒரு விரோதப் போக்கும் அபாயத்திற் குள்ளாக்க முடியாதிருந்தது. மீண்டும் ஒருமுறை தாவீது பெலிஸ்தரிடம் அடைக்கலம் அடைகின்றார். அவர்களின் அரசரான ஆகீஸ், அவரை அன்புடன் வரவேற்கின்றார், ஆனால் அவர் பெலிஸ்திய பிரபுக்களால் நம்பப்படாதிருந்தார்; மற்றும் சவுலுடனான அவர்களின் கடைசி யுத்தத்தில், ஆகீஸ் தாவீதை அவரது சொந்த மக்களுக்கு எதிராகப் போர் செய்யும்படி அழைத்துப் போக விரும்பிய வகையில், தாவீதைப் பற்றிய அவர்களின் பொறாமை ஒரு வேதனைமிக்க இக்கட்டான நிலையிலிருந்து அவரை (தாவீதை) விடுவிக்கின்றது. கடைசியில், கில்போவாவில் சவுலின் தோல்வியும் மரணமும், தாவீதுக்கு அரியணையேகும் வழியைத் திறந்து வைத்தது.

***4. சகாப்தம்* IV.—*யூதா மீது அரசர்; உள்நாட்டு யுத்தம்.***—*சுயாதீனமான இந்த* booter *(வழிப்பறிக்காரர்/போராளி?) எவ்வகையான அரசராயிருப் பார்? இவர் கீழ்மைப்பட்ட வகையில், தனது சொந்தப் பகைவர்களைப் பழி வாங்குபவராக, தம்மை முழுமையான பறிமுதல்களினால் வளமூட்டுபவ ராக இருப்பாரா? "தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான மனிதர்" அப்படிப்பட்டவராய் இருக்கவில்லை. அவரைச் சட்டத்திற்குப் புறம்பான வர் என்றும் நாடு கடத்தப்பட்டவர் என்றும் அடையாளப் படுத்தியிருந்த அதே பெருந்தன்மையும் சுயகட்டுப்பாடும் அவரை அரசராகவும் பண்பு படுத்துகின்றன. அவர் தமது முந்திய விரோதியைப் பெருந்தன்மையாக நடத்துகின்றார், ஒரு விருதை/பலனைப் பெறலாம் என்ற நம்பிக்கையில், யுத்த களத்தில் சவுலைக் கொன்றதாக உரிமைகோரிப் பொய்யுரைத்த ஒரு அமலேக்கியனை அவர் தூக்கில் இட்டார். மேலும் அவர் சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோர்மீது ஒரு மென்மையான இரங்கற் பாடலையும் தொகுத்தார். தாவீது சட்டத்திற்குப் புறம்பான தமது வாழ்வின்போது தமது சொந்த கோத்திரமான யூதாவின் தலைவர்களின் நம்பிக்கையை அதிகமாய்ப் பெற்றிருந்தார், இப்பொழுது அவர்கள் அவரை அரசர் என்று ஏற்புடைய வகையில் அங்கீகரித்தார்கள். எபிரோன் என்பது முற்பிதாக்களின் காலத்தில் ஒரு பழங்கால முன்னோர்களின் நகராயிருந்தது. ஆபிரகாம் அங்கு வாழ்ந் திருந்தார்; ஈசாக்கு அங்கு (தான்) பிறந்தார், மற்றும் அங்கிருந்த மக்பேலா குகையிலேதான் ஆபிரகாமும் சாராளும், ஈசாக்கும் ரெபோக்காளும், யாக்கோபும் லேயாளும் புதைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் வெற்றி கொள்ளப்பட்ட வேளையில் இது கானானியர்களின் நகர்களில் ஒன்றாக இருந்தது. இங்கு தாவீது தம் தலைநகரை நிலை நிறுத்தினார்; இங்கு அவர் யூதாவின் மனிதர்களால் வெளியரங்கமாய் அபிஷேகம் செய்யப்பட்டார், மற்றும் இங்கு அவர் ஏழாண்டுகளுக்கும் மேலாக ஒரு கோத்திரத்தின்மீது ஆளுகை செய்தார். மற்ற கோத்திரங்கள் சவுலின் மகனான இஸ்பொஸேத் துக்குக் கீழ்ப்படிந்தன. அவர் மிகப் பலவீனமானவராகவும், வெறுமனே*

பெயருக்குத் தலைவராகவும் மட்டும் இருந்தார். அவரது படைத்தலை வரான அப்னேர் என்பவர் தான் அவர் (இஸ்பொஸேத்) நிமித்தம் எல்லா கட்டளைகளையும் பிறப்பித்து வந்தார். யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த மகனாயீம் என்ற இடம் அவர்களின் தலை நகராகத் தேர்ந்து கொள்ளப் பட்டது, அவர்கள் தங்களுக்குப் பின்னால் பதினோரு கோத்திரங்களைக் கொண்டிருந்து ஏழாண்டுகள் அளவாக போட்டி அரசு ஒன்றைப் பராமரித்து வந்தனர். ஏழு ஆண்டுகள் உள்நாட்டு யுத்தத்திற்குப் பிறகு, இஸ்பொசேத்து தனது படைத் தளபதியான அப்நேருடன் சண்டையிட்டார், அவர் (அப்நேர்) உடனே எல்லாக் கோத்திரங்களையும் தாவீதின் கீழ் கொண்டு வரும்படி தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்தார். இது நிறைவேறு முன்னர், அப்நேரின்மீது பொறாமை கொண்டவராய்க் காணப்பட்ட யோவாப் என்ற தாவீதின் படைத்தளபதி அப்நேரை வஞ்சகமாய் கொலை செய்தார். அப்நேர் மரணம் அடைந்ததும், எதிர்த்து நின்ற அரசு சீர் குலைந்தது, தாவீது இஸ்ரவேல் முழுவதற்கும் வெற்றிகரமாக அரசராய் முடி சூட்டப்பட்டார்.

***5. சகாப்தம் V.—இஸ்ரவேல் முழுவதன் மீது அரசர்.***—தாவீது எபிரோனில் இரண்டாவது முறையாக வெளிப்படையாய் அபிஷேகம் செய்யப்படுகின்றார். எல்லாக் கோத்திரங்களின்மீதும் முப்பத்துமுன்று ஆண்டுகள் அளவான அவரது ஆளுகையானது இயல்பாகவே இரு பிரிவுகளாக அல்லது கால வேளைகளாக அமைகின்றது.

*அ. வளமும் வல்லமையும்/அதிகாரமும் அதிகரித்த காலவேளை.*—இது தேவன்மீது பற்றுறுதி அதிகரித்த கால வேளையாகவும் இருந்தது. மிகவும் மையமான தலைநகர் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் என்பதே தாவீதின் முதல் அடிவைப்பாய் இருந்தது. எபூஸ் அல்லது எருசலேம் என்ற நகரானது கானானியர்களின் பழைய தலைநகராய் இருந்தது. வெற்றி கொண்டதி லிருந்து இருமுறை - யோசுவாவின் நாட்களில் ஒருமுறையும், நியாயாதிபதி களின் காலத்தில் ஒருமுறையும் - இந்த நகரம் பிடிக்கப்பட்டிருந்தது; ஆனால் அங்கிருந்த கோட்டையை எபூசியர்கள் தொடர்ந்து கைப்பற்றியிருந்த படியால் நகரையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந் தார்கள். தாவீது அதைத் தமக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி (எபூசியர்களை அங்கிருந்து) துரத்தி விட்டு, பேழையை அங்கு கொண்டு வந்து, இவ்விதமாய் அந்த நகரத்தை மதரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தலைநகரமாக்கினார். தாவீதின் நாட்களில் இருந்து இது எபிரெயர்களின் எல்லா நகரங்களின் நகரமாக விளங்கி வந்துள்ளது. ஆனால் அவர் (தாவீது) கானானியர்களின் இந்தச் சிறு துணுக்கைத் தனக்குக் கீழ்ப்படுத்தியதோடு நிறுத்தி விடவில்லை. சவுல் யுத்தத்தில் பெரியவராய் இருந்தார், அது போல தாவீது யுத்தத்தில் இன்னும் பெரியவராய் இருந்தார். அவர் எகிப்திலிருந்து ஐப்பிராத்து வரையிலும் ஒவ்வொரு நாடும் தம் அதிகாரத்திற்கு உரிமையாகும் வரை யிலும் தமது படையெடுப்புகளை பெலிஸ்தர், ஏதோமியர், மோவாபியர், அம்மோனியர், சீரியர் ஆகியோர் மீது ஒவ்வொரு திசையிலும் செயல் படுத்தினார். பெனிக்கியாவின் அரசனான ஈராம் (தாவீதுடன்) நட்புறவு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதால் அந்நாடு சுதந்திரமாய் இருக்கும்

படி விடப்பட்டது. இவ்விதமாக, ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் வாக்குத்தத்தமானது தாவீதின் பேரரசில் மாபெரும் புவியியல் பரப்பில் நிறைவேறிற்று.

*ஆ. வீழ்ச்சியின் கால வேளை.*—தாவீது மாபெரும் நபராய் இருந்தாலும், அவர் சோதனைக்கு அப்பாற்பட்டவராய் இருக்கவில்லை. படைவீரன் உரியாவின் மனைவியான பத்சேபாளுடன் குற்ற உணர்வுள்ள உறவுப் பிணைப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டபடியால், தாவீது உரியாவைப் போரில் சாகும்படி விடச் செய்து பத்சேபாளைத் திருமணம் செய்து கொண்டார். தீர்க்கதரிசியான நாத்தான் தாவீது அரசரின் முகத்திற்கெதிராக அவரது குற்றத்தை உணர்த்தி, பெண் ஆட்டுக் குட்டியொன்றின் கதை வழியே தாவீதின் குற்றத்தினுடைய பெருங் கொடுமையை அவர் உணரச் செய்தார். ஐம்பத்தி ஒன்றாம் சங்கீதம் தாவீதின் மனந்திரும்புதலின் பக்குவமான/முதிர்ந்த விளக்கமாக உள்ளது. ஆனால் எந்த மனந்திரும்புத லும் அவரது குற்றத்தின் விளைவுகளை விலக்க முடியாதிருந்தது. அந்த நாள் முதல் தாவீதின் (வாழ்க்கை) வானமானது சொந்த வீட்டில் அவல நிலை களால் மேகமூட்டமாய் இருந்தது. அவரது ஒரு மகன் தன் சகோதரிக்குத் தவறிழைத்தமைக்காக இன்னொரு மகனைக் கொல்லுகின்றார். அவரது மிகப் பிரியமான மகன் அப்சலோம் ஒரு கலகத்தில் அழிகின்றார், அது ஏறக்குறைய அரசரின் அரியணையையும் அவரது உயிரையும் விலையாகக் கொடுக்க வேண்டிய அழிவாயிற்று. அவர் தம் நம்பிக்கைக்குரிய படைத் தலைவரான யோவாப், (தாவீதின்) மூத்த மகனான அதோனியாவின் சூழ்ச்சியில் அக்கறை கொண்டு இருக்கின்றார்; மற்றும் சாலொமோனின் ஆட்சி பின் தொடருவதற்காக அவருக்குத் தாவீது முடிசூட்டியிருக்கின்றார். நாற்பது ஆண்டுகள் ஆட்சிக்குப் பிறகு அவரது (சுய) மரணம் விரைவில் நேரிட்டது.

***6. தாவீதினுடைய ஆட்சியின் தன்மைகள்.***—தாவீதின் ஆட்சியானது எபிரெய வரலாற்றில் மிகவும் மகிமைக்குரியதாக இருந்தது. வெளிப் பகட்டான மேன்மையில் வேண்டுமானால் சாலொமோனின் ஆட்சியானது தாவீதின் ஆட்சியை விட அதிகமானதாயிருக்கலாம், ஆனால் வலிவிலும் வளத்திலும் மிகச் சிறந்த கூறுகளிலும் தாவீதின் ஆட்சியே உச்சகட்ட மானதாகக் குறிப்பிடுகிறது.

*அ. இது ஒரு இராணுவ ஆட்சியாக இருந்தது.*—இந்தக் காலகட்டத்தில் எகிப்தும் அசீரியாவும் மேற்கு ஆசியாவின் சிறிய இனங்களை விடுத்து தாழ்ந்த நிலைக்குச் சென்றிருந்தன. மேன்மைத்துவத்தில் மட்டுமே பாதுகாப்பு அமைந்து கிடந்தது. சவுலின் தொடக்க ஆண்டுகளின் வெற்றி யானது தாவீதின் வெற்றிகரமான முகாம்களினால் ஒளி குறைக்கப்பட்டது/ மங்கலாக்கப்பட்டது, தாவீதின் பேரரசானது எகிப்திலிருந்து ஐப்பிராத்து வரைக்கும் மகா கீர்த்தியில் (மற்ற பேரரசுகளை) ஒளி குன்றச் செய்தது.

*ஆ. இது உள்ளான மேம்பாட்டின் காலமாய் இருந்தது.*—தாவீது மனிதர்களை அதிகாரம் செய்வதற்கென்றே பிறந்தவராக, இயல்பாகவே ஒருங்கமைப்பாளராக இருந்தார். அவர் அரசின் அரசியல் நிர்வாகத்தையும் தொழில்/செயல் சக்திகளையும் ஒருங்கமைத்தார்; பயன்மிக்கதும் அலங்கார வேலைப்பாடுமான கலைகளை அறிமுகப்படுத்தினார்; சேமிப்புக்

கிடங்குகளையும் கோட்டைகளையும் கட்டியெழுப்பினார்; எல்லா வற்றிற்கும் மேலாக, அவர் எருசலேமை விரிவாக்கி அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தினார், அங்கு ஒரு இராஜரீக அரண்மனையைக் கட்டியெழுப்பி, "தாவீதின் நகரத்தை" நாட்டின் பெருமையாக்கினார்.

*இ. இது இலக்கிய ரீதியான ஆளுகையாய் இருந்தது.*—சங்கீதங்கள் வேதாகமத்தின் மிகச் சிறந்த கவிதைகளாய் உள்ளன, மற்றும் தாவீதின் பாடல்களே சங்கீதங்களில் மிகச் சிறந்தவைகளாக உள்ளன. ஆனால் நாம் காணப் போகின்றபடி தாவீது மாத்திரமே எழுத்தாளராகவோ அல்லது கவிதை மட்டுமே இலக்கியத்தின் ஒரே வடிவமாகவோ இருப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக

*ஈ. இது மதரீதியான ஆளுகையாய் இருந்தது.*—தாவீது தன்னிடம் இருளான (ஒரே) ஒரு குற்றம் இருந்தாலும் இருதயத்தில் ஆழமிக்க மத உணர்வுள்ள மனிதராய் இருந்தார். அவருடைய வாழ்வின் ஓட்டமானது சரியானதாயிருந்தது. தேவனிடத்தில் விசுவாசம், தேவனிடத்தில் மெய்ப்பற்று, தேவனிடத்தில் நன்றியுணர்வு - என்ற இம்மூன்று பண்புகளும் மற்ற ஒவ்வொரு அரசரிடத்திலிருந்தும் அவரை சிறப்புறத் தனிப்படுத்தி யவையாகவும், அவற்றை நாட்டவர் மீது அவர் வலிவுடன் மனதில் பதியச் செய்தவையாகவும் உள்ளன. பரிசுத்த (உடன்படிக்கைப்) பேழையை, அது பெலிஸ்தரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்களால் திருப்பி அனுப்பப் பட்ட நாள் முதலாய் இருந்த இடமான கீரியாத் யாரீமில் இருந்து எருசலேமுக்கு மாற்றுவித்தார். அவர் நாட்டின் மதரீதியான வாழ்வை ஒருங்கமைத்து விரைவுபடுத்தி, அது அடைந்திருந்ததிலேயே உயர்வான மட்டத்திற்குக் கொண்டு வந்தார். ஆலயம் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகள் யாவற்றையும் அவர் செய்தார், தேவனுடைய தடையினால் மாத்திரமே அதைக் கட்டுவதினின்று அவர் நிறுத்தப்பட்டார். மெய்யான ஒரே தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் உணர்வினால் ஏற்பட்ட உற்சாகத்தில் பின் வந்த எல்லா அரசர்களுக்கும் தாவீது ஒரு எடுத்துக்காட்டைக் கொடுத்தார். "அவன் தாவீதின் வழிகளில் நடந்தான்;" "அவன் தாவீதின் வழியில் நடவாதிருந்தான்;" இதுவே வரலாற்றாளர் தாவீதின் பின் சந்ததி யினரைப் புகழ்ந்துரைக்கவோ அல்லது கண்டனம் பண்ணவோ பயன் படுத்திய முறைப்படியான கூற்றாக இருந்தது. மேலும் அவர் (தாவீது) பூமியின் மீதேங்கும் நீதியில் ஆட்சி செய்யப் போகிறவராயிருந்த மேசியா வின் மிக உயர்வான மாதிரியையும் கொடுத்தார்.

## IV. சாலொமோனின் ஆளுகையும் அவரது பண்பும்.

*(1 இரா. 2 -11; 2 நாளா. 1-9.)*

***1. சாலொமோனின் அரியணையேற்றமும் ஆளுகைகளும்.***—சாலொமோன், "இரத்தாம்பரத்தில் பிறந்த" முதல் எபிரெய அரசரா யிருந்தார். (அவரது) பதவிக்கு வரும் உரிமையானது வரலாறு முழுவதிலும் இடர்பாட்டிற்குரிய ஒன்றாகவே இருந்துள்ளது. தாவீதுக்கு அவரது மனைவியர் பலரின் மூலம் இருபது அல்லது அதற்கு அதிகமான மகன்கள்

இருந்தனர். நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, அம்மோனும் அப்சலோமும் கொடூரமரணம் அடைந்தனர். மற்ற மூத்த மகன்கள் எல்லாரையும் விட்டுவிட்டு, தாவீது தமக்குப் பின் பதவியில் அமர்வதற்கு சாலொமோனைத் தேர்ந்து கொண்டார். அவருடைய இந்தத் தேர்ந்து கொள்ளுதலானது ஒருவேளை அவர், சாலொமோனின் தாயான பத்சேபாளிடம் காண்பித்த ஒரு தலைப்பட்சமான/அதிகப்படியான அன்பினால் ஏற்பட்டிருக்கலாம், ஆனால் அநேகமாகப் பெரும்பாலும் சாலொமோனின் மேன்மைமிக்க தகுதிகளினாலேயே ஏற்பட்டிருந்தது. அதோனியாவின் கலகத்தின் பொழுது சாலொமோனை முடி சூட்டும்படி தாவீது துரிதமாய்ச் செயல்பட்டதன் மூலம், அவர் (சாலொமோன்) தாவீதின் மரணத்தின் பொழுது சமாதானமாய் பதவிக்கு வந்தார். ஆனால் அதோனியாவிற்கு ஆதரவான இன்னொரு சூழ்ச்சியின் அடையாளங்கள் தோன்றுகின்றன, சாலொமோன் துரிதமாக யோவாபையும் அதோனியாவையும் தூக்கிலிடும்படி உத்தரவிடுகின்றார். இவ்வாறு அவர் தம் தந்தையின் பரந்து விரிந்த ஆளுகையின்மீது பிரச்சனையற்ற வகையில் இராஜரீகம் செலுத்தும்படி விடப்பட்டார். (அவரது) நாற்பதாண்டுகள் ஆட்சியின்போது, உள்நாட்டில் தீவிரமான கலகங்களோ அல்லது வெளியிலிருந்து யுத்தங்களோ உள்ளான மேம்பாட்டிற்கான அவருடைய திட்டங்களுக்குத் தொந்தரவு தரவில்லை.

**2. சாலொமோனின் ஞானமான தேர்ந்துகொள்ளுதல்/தெரிவு.—** சாலொமோன் அரியணை ஏறிய உடனே எருசலேமில் இருந்து வடக்கில் ஏழு மைல் தொலைவில் இருந்த கிபியோனில் மதரீதியான மிகச் சிறப்பான பண்டிகையைக் கொண்டாடினார், அங்குதான் பழைய உடன்படிக்கையின் கூடாரம் அப்பொழுது வரையிலும் இருந்தது. பேரரசின் சுமையானது அவரது இளம் நெஞ்சில் கிடந்ததென்பது மெய்ப்பிக்கப்படுகின்றது, ஏனெனில் அந்த இரவில் கனவொன்றில் அவருக்கு தோன்றிய தேவன், அவர் கேட்பது எதுவாயிருந்தாலும் கொடுப்பதாகக் கூறினார்; இது ஒரு அபாயமான சுயாதீனம் என்று நாம் அனைவருமே உணருகின்றோம். பொதுவான சிந்தைகளின் கீழான பொருட்களைக் கடந்து சென்ற சாலொமோன், தமது மக்களை ஆள்வதற்கான ஞானத்தைக் கேட்டார். “அவர் ஞானத்தைக் கேட்டதன் மூலம் தம் ஞானத்தைக் காண்பித்தார்;” மற்றும் அவர் காலத்தில் இருந்த எல்லாரைக் காட்டிலும் மிக மேலான ஞானம் அவருக்குத் தரப்பட்டது. அவரது ஞானம் பற்றிய விவரிப்புகள் நடைமுறை நியாயத்தீர்ப்பிலும் (1 இரா. 3:16-28), அறிவியல் அறிவு மற்றும் இலக்கியத் திறன் (1 இரா. 4:29-34) ஆகியவற்றிலும் தரப்பட்டுள்ளன. அவரது மூவாயிரம் நீதிமொழிகளில் ஆயிரத்திற்கும் குறைவானவைகளே நமக்குக் கிடைத்துள்ளன; மற்றும் அவரால் எழுதப்பட்டதாய்க் குறிப்பிடப்படும் சங்கீதம் 72 மற்றும் 128 ஆகியவற்றை நாம் உள்ளடக்காமல் இருந்தால், அவரது ஆயிரத்து ஐந்து “பாடல்களில்” ஒன்றே ஒன்று மட்டும் நமக்குப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. அவரது அளவுக்கதிகமான நிர்வாகப் பணிகள், மாபெரும் கட்டிடப் பணிகள் ஆகியவற்றின் மத்தியிலும் (அவர் செய்த) இப்படிப்பட்ட இலக்கியப்

பணியானது, மிக உயர்வான மதிநுட்பத் திறமையைக் காண்பிக்கின்றது; மற்றும் பதிவேட்டிலிருந்து, "... பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்"[4] என்பதும், சேபாவின் இராஜ ஸ்திரீயின் வார்த்தையின்படி "இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை"[5] என்பதும் புரிந்துகொள்ளப்பட்டது.

***3. சாலொமோனின் தேவாலயம்.***—தேவாலயத்தைக் கட்டி எழுப்புதல் என்பது இந்த இளம் அரசரின் முதல் அக்கறைகளில் ஒன்றாக இருந்தது. தாவீது ஏற்கனவே திட்டங்கள் தீட்டி, தயாரிப்புகளை விரிவாக ஏற்படுத்தியிருந்தார். லீபனோன் மலையிலிருந்து கேதுரு மரங்களையும், திறமை கொண்ட தொழிலாளிகளையும் தருவிப்பதற்காகத் தீருவின் மன்னர் ஈராம் என்பவருடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் (ஆலயத்தின்) கட்டுமானப் பணியில் ஏழு ஆண்டுகள் செலவிடப்பட்டன. முதன்மைக் கட்டிடமானது 30க்கு 90 அடி அளவு (ஆசரிப்புக் கூடாரம் போல் இரு மடங்கு) மட்டுமே இருந்தது, இது உலகின் புற தெய்வ வணக்கக்காரர்களின் மாபெரும் கோவில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது மிகச் சிறு வடிவமைப்பாகும். ஆனால் இதன் விலைமதிப்பில் போட்டியிடக் கூடாததாகவே இருந்தது. இக்கட்டிடம் முழுவதும் இரண்டாயிரத்து எழுநூற்று அறுபது கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத் தகடுகள் போர்த்தப்பட்டது. ஆனால் காணப்படாத தேவனின் உருவாய்க் காணக் கூடிய எந்த ஒரு சொரூபமும் இல்லாதிருந்ததே அதன் மிக மேன்மையான தனிச்சிறப்பாயிருந்தது. முற்றிலுமான புலனுணர்வுமிக்க விக்கிரகாராதனையின் காலத்தில் இது மிக உயர்வான ஆவிக்குரிய தன்மையுடன் நின்றது. "இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?"[6] "உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு"[7] இப்படிப் பட்டவை சாலொமோன் தமது அர்ப்பணிப்பு ஜெபத்தில் வெளிப்படுத்திய மேன்மையான கருத்துக்களாயிருக்கின்றன. தேவாலயம் (கட்டி) முடிக்கப்பட்ட செயலானது நாட்டின் தலைநகருக்கான தாவீதின் மிகவுயர்வான குறிக்கோளாயிருந்தது. இராணுவம் என்பதல்ல ஆனால் ஆவிக்குரிய ஆளுகை; (உலகப்) பொருள் (வளம்) அல்ல ஆனால் ஒழுக்க மேன்மை என்பதே நாட்டின் குறிக்கோளை உணர்ந்தறிவதில் உதவுவதாகவும் இருந்தது. முதல் தேவாலயம் நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்படும் வரைக்கும் நானூறு ஆண்டுகளாக, நிலைநின்றது.

***4. சாலொமோனின் பிற கட்டிடங்கள்.***—சாலொமோனின் ஆளுகை, எபிரெய கட்டிடக் கலையின் மிக உன்னதமான காலமாக இருந்தது. "எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள் போலவும், கேதுரு மரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்தி மரங்கள் போலவும் அதிகமாக்கினான்."[8] அவர் தமக்கென்று சிறப்புமிக்க ஒரு அரண்மனையையும், அவரது உண்மையான அரசியாகக் கருதப்பட்ட பார்வோனின் மகளுக்கென்று ஒரு அரண்மனையையும், தமது பேரரசின் பல பகுதிகளில் எண்ணற்ற கோட்டைகளையும் நகரங்களையும் கட்டினார். அந்நகர்களில் ரோமரின்

காலத்தின் பனை மரம் என்று கருதப்பட்ட தாதமோர் மிகப் புகழ் பெற்ற நகராயிருந்தது.

***5. சாலொமோனின் வர்த்தகம்.***—தொடக்கத்தில் எபிரெயர்கள் ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் கவனித்து வந்த மேய்ப்புத் தொழில் செய்த மக்களாக இருந்தார்கள். எகிப்திலும், (கானான் நாட்டைக்) கைப்பற்றி வெற்றி கொண்ட பிறகும் அவர்கள் கனிகளையும் தானியங் களையும் வளரச் செய்த விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்தார்கள், மந்தையையும்/கால்நடைகளையும் வளர்த்தார்கள். இப்பொழுது, முதன் முறையாக அவர்கள் வர்த்தகம் செய்யும் மக்களாயினர். தீரியருடனான உடன்படிக்கை தொடர்பின் மூலமாக அவர்கள் ஸ்பெயினில் இருந்த தர்ஷீஸ் வரையிலும் மத்திய தரைக்கடல் வழியே வர்த்தகத்தில் ஈடுபட்டார் கள்; செங்கடலின் துறைமுகங்களின் மூலமாக அவர்கள் இந்தியாவுடன் விரிவான வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் அருகாமையிலிருந்த பெனிக்கியர்கள், எகிப்தியர்கள் மற்றும் அரபியர்கள் ஆகிய அயலகத்தவர்களிடத்திலும் தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து கொண்டார்கள்.

***6. சாலொமோனின் விசுவாச விலக்கம்.***—ஒரு சில வாழ்க்கை வரலாறுகளே சாலொமோனின் வாழ்க்கை வரலாறு போல் ஏமாற்றம் அளிப்பவையாக உள்ளன. அவர் அரசர்களின் பொதுவான கூட்டங்களின் தாழ்ந்த மட்டங்களுக்கு ஒரு நாளும் மூழ்கிப் போயிருந்ததில்லை; ஆனால் அவரது பிந்திய ஆண்டுகளின் நிறைவேற்றமானது அவரது இளமையில் இருந்த மேன்மையான வாக்குத்தத்தத்தில் இருந்து வேதனைமிக்க வகையில் தாழ்ந்து விழுவதைக் காண்கின்றோம்.

*அ. அரசருக்குரிய சட்டத்தை மீறுதல்.*—மோசே (உபா. 17:14-20ல்) அரசருக்கான சட்டத்தை வகுத்து வைத்திருந்தார். இதை சாலொமோன் மூன்று வழிகளில் மீறினார்: (1) இராணுவ இயலின் குறி மற்றும் அடையாளமாக குதிரைகளை ஏராளமாய்ப் பெருகச் செய்தது (1 இரா. 10:26), (2) தனது அந்தப்புறத்தில் ஆயிரம் பேராகும் வரை தனக்கு மனைவிகளைப் பெருகச் செய்தது; (3) தனது மக்கள் வறுமையடையச் செய்வதினால் மட்டுமே பெருகச் செய்திருக்கக் கூடியதான வெள்ளியை யும் பொன்னையும் ஏராளமாய்ச் சம்பாதித்தது. அவர் இவைகளைக் கூட்டிக் கொண்டார்.

*ஆ. தேவ ஆளுகையின் அடிப்படைச் சட்டத்தைத் தீவிரமாய் மீறிய செயல்கள்.*—''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் இருக்க வேண்டாம்''[9]; இது முதலாவது கட்டளையாக இருந்தது. இதனைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிப்பதற்கு இஸ்ரவேல் உறுதிக்குட்படுத்தப் பட்டது. உலகளாவிய பல தெய்வ வணக்கத்தை எடுத்தெறிந்து விட்டு, தூய்மையான ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுப்பதே (இஸ்ரவேல்) இனத்தின் உயர் குறிக்கோளாயிருந்தது; நாட்டின் இருப்புக்கு வேறெந்த நிறைவான காரணமும் இருந்ததில்லை. “சாலொமோன் வயது சென்ற போது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர் களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்.”[10]

*இ. நாட்டின் பலவீனம் மற்றும் சிதைவு ஆகியவற்றின் கூறுகள்.—* அரசருக்கான சட்டத்தை மீறிய இச்செயல்களும், அரசாட்சிக்கான சட்டமும் பலவீனத்தின் கூறுகளாய் இருந்ததாக நிரூபித்து அவரது (சாலொமோனின்) வீட்டார்மேல் தேவனுடைய நியாயாத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. வர இருந்த பிரிவினையின் வீழ்ச்சியானது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது, மற்றும் அவரது பிந்திய வாழ்வானது வீட்டில் திருப்தியின்மையையும் கப்பம் கட்டும் வெளிநாடுகளின் மத்தியில் அமைதி யின்மையையும் அடையாளங் காண்பித்தது. இருப்பினும் மும்முரமான அழிவு ஒன்றும் நேரவில்லை, மற்றும் சாலொமோன் தனது நீண்ட ஆளுகையை ஒப்பீட்டளவில் சமாதானமாய் முடித்தார்.

## V. *தீர்க்கதரிசிகளின் எழுச்சி.*

மோசே தமது சொந்த காலத்திலும், அதன் பிறகு பல நூற்றாண்டுகள் அளவும் தனிப்பட்ட மேன்மையுடன் நிற்கின்றார். யோசுவா மற்றும் சாமுவேல் ஆகியோருக்கிடையில் ஒரு தீர்க்கதரிசியின் பெயர் கூடக் குறிப்பிடப்பட்டதில்லை. ஆனால் சாமுவேல் மற்றும் முடியாட்சியுடன் மாபெரும் தீர்க்கதரிசிகளின் காலம் தொடங்குகின்றது. தீர்க்கதரிசி என்பவர் அரசருக்கு அவசியமான ஈடுதுணையாக இருந்தார்; மற்றும் சாமுவேல், சவுல் ஆகியோரின் நாட்களிலிருந்தே அவரது உருவகச் சித்தரிப்பும், மனதில் பதியும் செய்தியும் பழைய ஏற்பாட்டு வரலாற்றுத் தொகுதி முடியும் வரையிலும் அரிதாகவே காத்துள்ளன. மொத்தத்தில் சாமுவேல் சவுலைக் காட்டிலும் அதிகம் முக்கியமான நபராக உள்ளார். தீர்க்கதரிசிகளில் மகாபெரியவர்களில் ஒருவரான தாவீதே தீர்க்கதரிசிகளினால் நிலையாக அறிவுறுத்தப்பட்டும், எச்சரிக்கப்பட்டும் இருக்கின்றார். சாலொமோனின் ஆட்சிக் காலத்தில் தீர்க்கதரிசிகள் முக்கியத்துவமற்ற வகையில் பணியாற்றி னாலும் முடிவில் ஒரு தீர்க்கதரிசி தோற்றமளிக்கிறார். இந்தக் கால கட்டத்தின் தீர்க்கதரிசிகளாக, சாமுவேல், காத் (1 சாமு. 22:5; 2 சாமு. 24:11), நாத்தான் (2 சாமு. 7:2-17; 12:1-12; 1 இரா. 1:8-24), இத்தோ (2 நாளா. 9:29; 12:15; 13:22), மற்றும் அகிசா (1 இரா. 11:29-39; 2 நாளா. 9:29) ஆகியோர் உள்ளனர். வரலாற்றில் பொதியப்பட்டுள்ள நாத்தானின் உவமை போன்ற இங்கும் அங்குமாக துணுக்கு(கள்) தவிர இவர்களின் போதனைகளில் எதுவும் நமக்கு வந்து சேரவில்லை.

## VI. இந்தக் கால கட்டத்தின் இலக்கியம்.

எபிரெய இலக்கியத்தின் மிக முந்திய தேதியைத் தருதல் என்பது மிகவும் இயலாத செயலாக உள்ளது. பஞ்சாகமங்கள் (ஆதி. - உபா.) மோசேயின் காலத்திற்கு முற்பட்ட பதிவேடுகளை ஒரு பகுதி சார்ந்தமைந் தன என்பதில் ஏற்பில்லாதது எதுவும் இருப்பதில்லை. லாமேக்கின் "பட்டயப் பாடல்" (ஆதி. 4:23, 24) மற்றும் எண். 21:12-17, 27-30ல் உள்ள கவிதைத் துணுக்குகள் மிகப் பழங்காலத்திய கவிதைத் தொகுப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றது. அநேகமாக சாமுவேலின் காலத்தில் தொகுக்கப்

பட்டிருக்கக் கூடிய யோசுவாவின் புத்தகத்தில் "யாசேரின் புத்தகத்தில்" இருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது, அப்புத்தகம் இப்பொழுது காணப்படாமல் போய் விட்டது. தாவீதின் நாட்களில் இருந்தே வளம் மிக்கதொரு வரலாற்று இலக்கியம் உதித்தெழும்பிற்று, இது எகிப்து, கல்தேயா அல்லது அசீரியா ஆகியவற்றின் பேரரசுகள் நமக்கு உவந்தளித் துள்ள எதையும் அதிகம் மிஞ்சுவதாக உள்ளது. இவரின் (தாவீதின்) கால கட்டத்திலே நியாயாதிபதிகள் மற்றும் ரூத் என்ற புத்தகங்கள் எழுதப் பட்டிருக்கலாம். இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட பிற வரலாற்றுப் புத்தகங்களாக, "சாமுவேலின் வரலாறு," "நாத்தானின் வரலாறு," "காத்தின் பிரபந்தம்" (1 நாளா. 29:30) மற்றும் "சாலொமோனின் நடபடிகளின் புத்தகம்" (1 இரா. 11:41), ஆகியவைகளைக் கூறலாம். இவைகள் இப்பொழுது தொலைந்து போய் விட்டன, ஆனாலும் இப்பொழுது நாம் கொண்டுள்ள சாமுவேல் மற்றும் இராஜாக்களின் புத்தகங்களுக்கு இவைகள் அடிப்படையாய் இருந்தன என்பதில் ஐயம் இல்லை. ஆனால் தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் காலமானது, கவிதை மற்றும் "ஞான" இலக்கியத்தின் மேன்மையான அதன் வெளிப்பாட்டிற்கென்று விசேஷித்த வகையில் சிறப்பித்துக் குறிப்பிடப்படுகின்றது. சங்கீதங்களில் எழுபத்தி இரண்டு சங்கீதங்கள் தாவீதினால் எழுதப்பட்டவையென்று குறிப்பிடப்படுகின்றன, மற்றும் இரண்டு சங்கீதங்கள் (எழுபத்தி இரண்டாம் மற்றும் நூற்றி இருபத்தி எட்டாம் சங்கீதங்கள்) சாலொமோ னால் எழுதப்பட்டவையென்று குறிப்பிடப்படுகின்றன, சாலொமோனின் இலக்கியமானது தாவீதின் எழுத்துக்களில் இருந்த ஆவிக்குரிய உள்ளார் வத்தில் அதிகமான அளவை இழந்து போயிருக்கின்றது, ஆனாலும் யூகித்தறியும் வல்லமையையும் கலைநுட்பமான நிறைவுப் பணியையும் அதிகமாய்க் கொண்டு விளங்குகின்றது. நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப் பாட்டு ஆகியவை (சாலொமோனின்) முதன்மைப் பணிகளாய் உள்ளன.[11]

---

குறிப்புகள்

[1]1 சாமு. 16:13. [2]1 சாமு. 18:7. [3]1 சாமு. 18:9. [4]1 இரா. 4:34. [5]1 இரா. 10:7. [6]1 இரா. 8:27. [7]1 இரா. 8:39. [8]1 இரா. 10:27. [9]யாத். 20:3. [10]1 இரா. 11:4.

[11]பிரசங்கியின் புத்தகம் பின்வந்த கால கட்டத்திற்குரியதாக இருக்கலாம்.